**நுவரெலிய மாநகர சபை**
**நுவரெலியா மாவட்டம்**

------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 ஒக்தோபர் 08 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நுவரெலிய மாநகர சபையின் நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகளும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண வேலை கடன்பட்டோர் ரூபா 2,500,000 ஆலும் திரட்டிய நிதியக் கணக்கு ரூபா 500,000 கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது 02 செயற்திட்டங்களிற்காக கிடைத்திருந்த ரூபா 43,425,171 தொகையான மூலதன உதவிகள் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையால் மூலதன உதவி மற்றும் மூலதனச் செலவினம் அப்பெறுமானத்தினால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை முத்திரைக் கட்டணங்கள் ரூபா 25,330,864 ஆக இருந்த போதிலும், அது ரூபா 24,788,545 என காண்பிக்கப்பட்ட காரணத்தினால் நடைமுறைச் சொத்துக்கள் ரூபா 542,319 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 115,000 தொகையான 05 பைபர் கிளாஸ் வீதி விளக்கு தூண் முடிவுகள் நிலையான சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது ஆயுர்வேத மருந்துகள் கொள்வனவிற்காக வழங்கப்பட்டிருந்த ரூபா 1,500,000 ஆன முற்பணம் தீர்வு செய்யப்படாமை காரணமாக ஆண்டின் செலவினம் குறைத்தும் தீர்வு செய்யப்படாத முற்பணம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 145,000 பெறுமதியான கண்காட்சி இராக்கை (Display Cupboard) நிதி நிலைமைக் கூற்றில் சரியாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக வழங்கப்பட்ட முற்பணத் தீர்ப்பனவு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டின் போது ரூபா 2,999,334 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த 02 கொள்கலன் மலசலகூடங்கள் மூலதனமாக்கப்படாததன் காரணமாக சொத்துக்கள்

மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தினால் பங்களிக்கும் கணக்கு அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஏ) 2016 மலைநாடு மாகாண அபிமான விருது வழங்கல் விழாவின் பரிசுத்தொகை மற்றும் 2017 வசந்த விழா என்பவற்றிற்காக பல்வேறு அனுசரணையாளர்களிடமிருந்து கிடைத்த ரூபா 4,225,000 கூட்டுத்தொகை வருமானத்திற்கு செலவு வைக்கப்படாமல் வைப்புக்களின் கணக்கீடு செய்யப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் வருமானம் அப்பெறுமதியால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) சபைக்குச் சொந்தமான 02 வங்கிக் கணக்குகளில் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 889,094 ஆன மீதிகள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஒ) சபையினால் தனியார் வங்கியொன்றில் பேணப்பட்டு வரும் நடைமுறைக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 51,443 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஓ) ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய கடனுக்காக ஓய்வூதிய திணைக்களத்திடமிருந்து சபைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 126,425 உரிய கணக்குகளில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஔ) வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 474,585 இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்படாமையால் ஆண்டின் இறுதியில் காசு மீதி அப்பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(க்) சபை நகர அபிவிருத்தி அதிகாரசபையின் கொடுக்கல் வாங்கல்களுக்காக அரச வங்கியொன்றில் பேணிச் செல்லும் சேமிப்புக் கணக்கிலிருந்து சபையின் நடைமுறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 2,942,100 தொகை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

#### (அ) பெறவேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த பெறவேண்டிய 03 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 1,665,194 ஆக இருந்தன.

#### (ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 10 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த செலுத்த வேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 48,257,328 ஆக இருந்தன.

### 1.3.3 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்களுடன் தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
| --- | --- | --- |
| | ரூபா | |
| (அ) 2000 இன் 53 மற்றும் 1988 இன் 56 ஆம் இலக்க சட்டங்களினால் திருத்தம் செய்யப்பட்ட 1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் அதிகாரச்சட்டம் மற்றும் 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி பத்திரம். | 213,360 | 56 வியாரங்களின் சுற்றாடல் அனுமதிப்பத்திரங்கள் புதுப்பிக்கப்படாமல் இருந்ததுடன் ரூபா 213,360 ஆன குத்தகை வாடகை மற்றும் முத்திரைக் கட்டணங்கள் அறவிடப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | | |
| நிதிப்பிரமாணம் 371(2)மற்றும் 2015 யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை | 360,000 | 2014 ஆம் ஆண்டு முதல 2017 திசெம்பர் வரையான காலப்பகுதியில் 07 சந்தர்ப்பங்களில் வெவ்வேறு செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 360,000 ஆன கட்டுநிதி 2018 பெப்ரவரி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| | 460,270 | பதவிநிலைத் தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 07 சந்தர்ப்பங்களில் ரூபா 460,270 தொகை செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |
| | 330,000 | ஒரு தடவையில் வழங்கக்கூடிய ஆகக்கூடிய கட்டுநிதி ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் அந்த எல்லையை மிகைத்து 02 சந்தர்ப்பங்களில் ரூபா 330,000 தொகை வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) நிதிப் பிரமாணம் 103(1) மற்றும் மத்திய மாகாண சபையின் நிதி விதி 54 | 655,402 | சபைக்கு சொந்தமான 05 வாகனங்கள் விபத்திற்குட்டு ரூபா 655,402 நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும், விபத்து தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) (i) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனக் கோவையின் XIX ஆம் அத்தியாயம் | 284,153 | மாநகர பொறியியலாளர் மற்றும் மாநகர ஆணையாளர் ஆகியோர் பயன்படுத்தும் அரச விடுதிகளுக்கு சபை நிதியத்திலிருந்து ரூபா 784,653 செலவிடப்பட்டு திரைச்சீலை வழங்கப்பட்டிருந்தது. |
| (ii) XIX ஆம் அத்தியாயத்தின் 5 ஆம் பிரிவு | 203,831 | சபைக்குரிய பட்டியல்படுத்தப்பட்ட வீடுகளில் குடியிருக்கும் 03 உத்தியோகத்தர்களிடமிருந்து மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 140,612 ஆன வீட்டு வாடகை அறவிடப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 107,228,622 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 292,610,584 ஆகக் காணப்பட்டது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரித்தாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் நிலுவை |
| | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| (i) வீதவரி மற்றும் வரி | 82,248,792 | 86,961,780 | 82,637,247 | 93,255,272 | 79,600,000 | 87,652,308 | 92,193,341 | 92,483,611 |
| (ii) வாடகை | 83,038,586 | 48,619,605 | 47,505,781 | 40,637,959 | 69,769,544 | 41,850,851 | 46,080,115 | 36,717,443 |
| (iii) அனுமதிப் பத்திர கட்டணங்கள் | 22,712,000 | 22,350,622 | 22,204,028 | 1,424,360 | 18,317,000 | 20,957,232 | 21,059,519 | 1,333,360 |
| (iv) ஏனைய வருமானம் | 157,353,000 | 157,989,575 | 144,979,163 | 194,695,830 | 118,426,000 | 154,225,665 | 141,831,318 | 175,330,061 |

#### 2.2.2 வீத வரியும் ஆதன வரிகளும்

**(அ) வீத வரி**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 65,408,453 ஆன நிலுவை வீதி வரியிலிருந்து ஆண்டில் ரூபா 19,771,179 ஆன தொகை அதாவது 30 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 45,637,274 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீதவரி ரூபா 39,136,274 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 22,611,278 அதாவது 58 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 16,524,996 அறவிடப்பட வேண்டியிருந்தது.

**(ஆ) நீர்க் கட்டணங்கள்**

2017 சனவரி 07 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 27,075,157 ஆன நிலுவை நீர்க்கட்டணமொன்று காணப்பட்டதுடன் ஆண்டில் பட்டியலிடல் ரூபா 51,531,033 ஆக இருந்ததுடன் அதில் ஆண்டினுள் மொத்த அறவீடுகள் ரூபா 46,426,335 ஆக இருந்ததுடன் நிலுவை நீர்க்கட்டணம் ரூபா 32,179,855 ஆக இருந்தது. அதன் பிரகாரம் ஆண்டின் ஆரம்ப நிலுவையில் மற்றும் ஆண்டின் பட்டியலிடலின் அறவீடு 59.06 சதவீதமாக இருந்தது.

**(இ) காணி வரி**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 16,630,228 ஆன நிலுவை காணி வரியிலிருந்து ஆண்டில் ரூபா 1,373,560 ஆன தொகை அதாவது 8.26 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 15,256,668 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட காணி வரி வருமானம் ரூபா 1,742,247 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 483,557 அதாவது 27.75 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.3 வாடகை**

**(அ) கடை வாடகை**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 14,385,365 ஆன நிலுவை கடை வாடகையிலிருந்து ஆண்டில் ரூபா 9,301,781 தொகை அதாவது 64.66 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 5,083,584 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட கடை வாடகை வருமானம் ரூபா 18,496,072 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 5,550,380அதாவது 30 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

**(ஆ) வீட்டு வாடகை**

மீளாய்வாண்டின் சனவரி 01 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 501,586 ஆன நிலுவை வீட்டு வாடகையிலிருந்து ஆண்டில் ரூபா 108,600 தொகை அதாவது 21.65 சதவீதம் அறவிடப்பட்டிருந்ததுடன் மேலும், ரூபா 392,986 அறவிடப்பட வேண்டியிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வீட்டு வாடகை வருமானம் ரூபா 80,700 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 2,664 அதாவது 3.30 சதவீதம் அறவிடப்பட்டிருந்தது.

**2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப் பணம் ரூபா 531,553 தொகையும் முத்திரைக் கட்டணம் ரூபா 24,788,545 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தன.

**2.4 மிகை விதிப்புக்கள்**

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளில் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களில் 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 300,000 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றுகை**

மாநகர சபைச் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொது சுகாதாரம், பொது உபயோக சேவைகள் மற்றும் பொதுப் வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல், மக்களின் நல விவகாரங்கள், வசதிகள் மற்றும் நலன்கள் ஆகிய சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) எதிர்பார்க்கப்பட்ட நிறைவு மட்டங்கள் அடையப்படாமை**

2017 ஆம் ஆண்டிற்காக அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டின் பிரகாரம் 03 மூலதன நிகழ்ச்சித்திட்டங்களுக்காக ரூபா 135,719,410 மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததுடன் ஆண்டில் ரூபா 50,310,064 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மதிப்பிடப்பட்ட மூலதன செலவினத்தில் ரூபா 85,409,346 பயன்படுத்தப்படாமல் இருந்ததுடன் அது ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் பிரகாரம் நிதிஏற்பாட்டின் 50 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்டிருந்தது.

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள்**

நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் தொடர்பான பிரதேச சபை போதியளவில் அறியாமல் இருந்ததுடன் அது தொடர்பாக போதியளவு பணிகள் மீளாய்வாண்டில் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**3.2 முகாமைத்துவத் திறமையின்மை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நுவரெலியா கிரகெரி குளத்தின் வளவில் வெளித்தரப்பினரால் நடாத்தப்பட்டிருந்த பல்வேறு களியாட்ட விளையாட்டு கண்காட்சிகளில் இருந்து மீளாய்வாண்டில் சபைக்கு அறவிடப்பட வேண்டிய களியாட்ட வரி அறவிடும் போது முறையான வகையில் செயற்படாமல் இருந்ததுடன் இது தொடர்பாக பல்வேறு குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(ஆ) சபையினால் 2007 - 2017 இற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அனுமதிக்கப்பட்டிருந்த கட்டிட விண்ணப்பங்களின் எண்ணிக்கை 883 ஆக இருந்ததுடன் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வழங்கப்பட்ட இணக்கச் சான்றிதழ்களின் எண்ணிக்கை 106 ஆக இருந்தன. அதன் பிரகாரம் 777 விண்ணப்பங்களுக்காக இணக்கச் சான்றிதழ்கள் வழங்கப்படாமல் இருந்ததுடன் அதற்குரிய கட்டிடங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக பின்தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) முன்னைய 05 ஆண்டு காலப்பகுதியில் கிரகெரி குளத்தில் படகுச் சேவைகளை நடாத்திச் செல்வதற்காக 17 படகு உரிமையாளர்களுக்கு 2016 யூலை 10 ஆந் திகதி மாகாண தலைமை அமைச்சினால் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும், அந்த படகு உரிமையாளர்களுடன் கட்டண நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஒரு படகு உரிமையாளரால் ஓட்டத்தில் ஈடுபடுத்தக்கூடிய படகுகளின் எண்ணிக்கை தொடர்பாக வரையறையும் குறிப்பிடப்படாதிருந்ததுடன் இரண்டு படகு உரிமையாளர்களினால் 55 படகுகள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. அவ்வாறே 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளிற்குரியதாக இரண்ட படகு உரிமையாளர்களிடமிருந்து 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியதாக காணப்பட்ட ரூபா 532,957 நிறுவைப்பணத்தை அறவிடப்பட்டிருக்கவில்லை.

**3.3 மனித வள முகாமைத்துவம்**

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 34 பதவிகளில் 147 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் 01 பதவியில் மிகை காணப்பட்டது.

**3.4 விளைவற்ற / குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

வசந்த விழாவின் தேவைப்பாட்டிற்காக மீளாய்வாண்டில் ரூபா 2,993,335 செலுத்தி இரண்டு கொள்கலன் மலசலகூடங்கள் சபைக்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் 2018 மார்ச் ஆகஸ்ட் 28 ஆந் திகதி வரை அவை பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்**

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 ஏப்ரல் 25 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்யும் போது 03 வருமான விடயங்களில் 41 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையும் 08 செலவின விடயங்களில் 12 சதவீதம் முதல் 155 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

**5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வவ்போது பிரதேச சபையின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருந்ததுடன் பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக சபையின் விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | வருமான நிர்வாகம் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) | கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | பழைய கடன் மீதிகள் தீர்வு செய்யாமை. |
| (இ) | சொத்துக்கள் | உயர் இயலளவில் பயன்படுத்தாமை<br>உரிய பராமரிப்பு மற்றும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படாமை |